செ.வெ.எண்: 373 நாள்:29.06.2021

தமிழகத்தில் தொழில் முனைவோர்களை ஊக்குவித்து அவர்களை மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரினவளர்ப்பில் அதிகமுதலீடுசெய்திடும் நோக்கில் பிரதம மந்திரி மீன் வளமேம்பாட்டு திட்டத்தின் கீழ் **“மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்கான தொழில் முனைவோர் மாதிரி”**திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. மீனவர்கள், மீன்வளர்ப்போர், சுய உதவிக்குழுக்கள்/ கூட்டுபொறுப்புகுழுக்கள், மீன்வளர்ப்போர் உற்பத்தியாளர் அமைப்புகள் தனிநபர் தொழில்முனைவோர் தனியார் நிறுவனங்கள் இத்திட்டத்தில் பயன்பெறலாம். இத்திட்டத்தின் கீழ் பொதுபிரிவினருக்கு 25 விழுக்காடுமத்திய மற்றும் மாநிலஅரசின் நிதியுதவியும் (மொத்த திட்ட மதிப்பீட்டீல் மானியத்தொகையின் உச்சவரம்புரூ.1.25கோடி) மற்றும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மகளிருக்கு 30 விழுக்காடு மத்தியமற்றும் மாநில அரசின் நிதியுதவியும் (மொத்த திட்ட மதிப்பீட்டில் மானிய தொகையின் உச்சவரம்புரூ.1.50கோடி) வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன் பெறவிரும்புவோர் எண்:873/4,அறிஞர் அண்ணாசாலை, கீழவாசல், தஞ்சாவூர் எனும் முகவரியில் இயங்கும் தஞ்சாவூர் மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசிஎண்: 04362-235389,கைபேசிஎண்: 9384824254 ) இத்திட்டத்திற்காக விண்ணப்பிக்க வேண்டிய கடைசிநாள்: 31.07.2021. மேலும், இதற்குரிய விண்ணப்பங்கள் மற்றும் கூடுதல் விவரங்களை www.fisheries.tn.gov.in என்ற இணைய தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் தெரிவிக்கிறார்.

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.